வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

# வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குச் செல்லும் பணியாளர்களுக்கான அறிவித்தல்

1994 இன் 4 ஆம் இலக்க மற்றும் 2009 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக சட்டத்தின் 51 ஆம் பிரிவிற்கமைய இலங்கைக்கு வெளியே வேலை செய்வதற்காக ஆட்சேர்க்கப்பட்டுகின்ற (தென் கொரியா உள்ளிட்ட) அனைத்து இலங்கையர்களும் கீழ்க்காணும் பதிவுக்கட்டணத்தை செலுத்தி இலங்கையிலிருந்து வெளியேற முன்னர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்தல் வேண்டும். அதற்கமைய செலுத்த வேண்டிய பதிவுக்கட்டணம் கீழ்க்காணும் படி அமையும்.

1. ஏதாவதொரு பணியாளர் தொழில் தருனருடன் முதன் முறையாக தொழில் ஒப்பந்தமொன்றுக்குச் செல்லும் சந்தர்ப்பத்தில் **பதிவுக் கட்டணம் ரூபா 15200/- ஆகும். அதற்கு பெறுமதி சேர் வரி 15% ரூபா 2327/- மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2% ரூபா 310/- சேர்க்கப்படும். அதற்கமைய செலுத்த வேண்டிய முழுத் தொகை ரூபா 17837/-**

(அதற்கமைய ஏதாவதொரு பணியாளர் தனது முன்னைய தொழில் தருனரை மாற்றி புதியதொரு தொழில் தருனரை தேடிக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் மேற்கூறிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதிய பணியக பதிவைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்)

2. ஏதாவதொரு பணியாளர் ஒரே தொழில் தருனருடன் இரண்டாம் தடவை அதற்கு மேல் தடவைகளில் தொழில் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் **பதிவுக் கட்டணம் ரூபா 3200/- ஆகும். அதற்கு பெறுமதி சேர் வரி 15% ரூபா 490/- மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2% ரூபா 65/- சேர்க்கப்படும். அதற்கமைய செலுத்த வேண்டிய முழுத் தொகை ரூபா 3755/-**

மேற்குறிப்பிட்ட பதிவு மற்றும் பதிவைப் புதுப்பிக்கும் சலுகை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைமைக் காரியாலயம், மாவட்ட காரியாலயம் அல்லது குறிப்பிட்ட நாட்டில் இலங்கை தூதுவராலயத்தின் தொழில் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்**
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
கொஸ்வத்த, பத்தரமுல்ல.
தொலைபேசி : 0112 880500 / தொலைநகல் - 0112 880564
இணையம்- www.slbfe.lk